[2018] 10 எஸ்.சி.ஆர். 375

கதூன் மற்றும் பலர்

–எதிர்–

உத்தரபிரதேச அரசு முதன்மை செயலாளர் மற்றும் பலர்

(உரிமையியல் மேல்முறையீடு எண் 2127/2018)

பிப்ரவரி 15, 2018

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். கே. அகர்வால்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. அபய் மனோகர் சப்ரே

நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 1894 – பிரிவுகள் 4, 6 மற்றும் 17 – மாநில அரசு, பல கிராமங்களில் அமைந்துள்ள நூற்றுக்கணக்கான ஹெக்டர்கள் நிலத்தை கையகப்படுத்தியது – இதனால் பாதிக்கப்பட்ட சில நில உரிமையாளர்கள் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தனர் – கஜ்ராஜ் மற்றும் மற்றவர்கள் எதிர் உத்தரப் பிரதேச மாநில அரசு மற்றும் மற்றவர்கள் என்ற வழக்கில் நீதிப்பேராணை மனுவில் உயர் நீதிமன்றம் முதன்மை தீர்ப்பு வழங்கியது – உயர் நீதிமன்றம் தனது திர்ப்பில், நிலம்

கையகப்படுத்துதலை உறுதி செய்தாலும், மாநில அரசுக்கு சில உத்தரஹகளைப் பிறப்பித்தது. அதே சமயம், நில உரிமையாளர்களுக்கு அவர்களுடைய நிலத்திற்காக 64.70% வீதம் கூடுதல் இடைக்கால இழப்பீடு வழங்கவும், மேலும் ஒவ்வொரு மனுதாரருக்கும் அவர்களுடைய கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் 10% அளவில் மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனையை ஒதுக்கவும் உத்தரவிட்டது – இதை, சாவித்திரி தேவி எதிர் உத்தரப் பிரதேச மாநில அரசு மற்றும் பலர் என்ற வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டது – சில நில உரிமையாளர்கள்–மனுதாரர்கள், அவர்களது நிலங்களும் கையகப்படுத்தப்பட்டவையாக இருந்த நிலையில், புதிய நீதிப்பேராணை மனுக்களை தாக்கல் செய்தனர் – உயர்நீதிமன்றத்தில் தீர்ப்புரை பெற்ற நில உரிமையாளர்களுக்கு அளிக்கப்பட்ட அதே நிவாரணங்களை நாங்களும் பெறுவதற்கு உரிமையுடையவர்கள் என்ற கோரிக்கையை முன்வைத்தனர் – மனுதாரர்கள் உட்பட அனைத்து நில உரிமையாளர்களுக்கும், எந்தவிதமான எதிர்ப்பும் இன்றி, 64.70% கூடுதல் இழப்பீடு மாநில அரசால் வழங்கப்பட்டு அமல்படுத்தப்பட்டது – எனவே, மனுதாரர்கள் அவர்களது கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் 10% அளவில் மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனையை ஒதுக்கீடு செய்யும் நிவாரணத்தைப் பெறுவதற்கு உரிமையுள்ளவர்களா என்பது ஒரு கேள்வியாகவே முன்வைக்கபட்டது – இந்த நிவாரணத்தை உயர்நீதிமன்றம் நிராகரித்தது – மேல்முறையீட்டில், தீர்முடிவு: மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனையை ஒதுக்கீடு செய்யும்

நிவாரணத்தைப் பெறுவதற்கு உரிமையுடையவர்கள் அல்ல – முன்பு தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுக்களில் உயர் நீதிமன்றம் தெளிவாகவே, இந்த நிவாரணத்தை வழக்கில் மேல்முறையீட்டாளர்களாக இருந்த நில உரிமையாளர்களுக்கு மட்டுமே வழங்கியது – மேலும், அதே சமயம், உயர்நீதிமன்றம், இந்த நிவாரணத்தை மற்ற நில உரிமையாளர்களுக்கு வழங்கும் பொருத்து முடிவு செய்யும் அதிகாரம் அரசு மட்டுமே முடிவெடுக்க முடியும் என்று கூறியது – அதன்படி அரசு, கூடுதல் இழப்பீட்டை வழங்க முடிவு செய்தது, ஆனால் மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனையை அந்த நில உரிமையாளர்களான மேல்முறையீட்டாளர்களுக்கு வழங்க மறுத்துவிட்டது – மேலும், உயர்நீதிமன்றத்தின் தொடக்க உத்தரவுகளின் பேரில் நிவாரணம் பெற்ற நில உரிமையாளர்களுக்கும் கூட மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனையை ஒதுக்கீடு செய்யும் நிவாரணத்தை வழங்க அதிகாரம் வழங்கவில்லை, மேலும் அவமதிப்பு மனுவை தாக்கல் செய்த போது உச்சநீதிமன்றம் அதை தள்ளுபடி செய்தது – எனவே, நில உரிமையாளர்கள் மனுதாரர்கள் அவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனையை வழங்குவதற்கான சட்டபூர்வமான உரிமையோ அல்லது உண்மை அடிப்படையோ இல்லை.

மேல்முறையீடுகளை தள்ளுபடி செய்த நிலையில், நீதிமன்றம் தீர்ப்பளித்ததாவது:

தீர்வு: 1. கஜ்ராஜ் மற்றும் பலர் எதிர் உத்தரப் பிரதேச மாநில அரசு மற்றும் பலர் என்ற வழக்கில் உயர்நீதிமன்றம் அளித்த இரண்டு உத்தரவுகளில், 64.70% கூடுதல் இழப்பீட்டை ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் வழங்க வேண்டும் என்ற உத்தரவை மாநிலம்/அணையம் ஏற்கனவே அமல்படுத்தியது. இதற்கேற்ப, அவர்களின் நீதிப்பேராணை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையிலும் மேல்முறையீட்டாளர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது, அதாவது, மேல்முறையீட்டாளர்களின் எந்தவித ஒப்புதலுமின்றி, கஜ்ராஜ் வழக்கில் வழங்கப்பட்ட உத்தரவைப் பகுதியளவில் பெற்றுள்ளனர். [பத்தி 36] [386–G]

2. எனவே, இம்மேல்மேமல்முறையீடுகளில் மிச்சமுள்ள ஒரே கேள்வி, மேல்முறையீட்டாளர்கள் கஜ்ராஜ் வழக்கில் உயர்நீதிமன்றம் வழங்கிய இரண்டாவது உத்தரவான, மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனையை பெற உரிமையுள்ளவர்களா என்பதை பற்றியதே ஆகும்.. [பத்தி 37] [386–H; 387–A]

3. கீழ்கண்ட காரணத்திற்காக, மேல்முறையீட்டாளர்கள் இந்த இரண்டாவது உத்தரவின் நிவாரணத்தைப் பெறுவதற்கு உரிமையில்லை. முதலில், கஜ்ராஜ் வழக்கில் உயர்நீதிமன்றம் மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனையை ஒதுக்கும் நிவாரணத்தை, நீதிப்பேராணை மனு தாக்கல் செய்த நில உரிமையாளர்களுக்கு

மட்டுமே வழங்க உத்தரவிட்டது. இன்னும் தெளிவாக சொன்னால், உயர் நீதிமன்றம், தனது தீர்ப்பில், மேலே வழங்கபட்ட வழிகாட்டுதல், நீதிப்பேராணை மனுகள் தாக்கல் செய்த மனுதாரர்களுக்கு மட்டுமே கிடைக்கத்தக்கது என்று வழங்கியது. [பத்தி 38, 39] [387–B–C]

4. இரண்டாவதாக, மேல்முறையீட்டாளர்கள் (இம்மனுதாரர்கள் போல) நிலம் கையகப்படுத்துதல் செயல்களை எதிர்த்து மனு தாக்கல் செய்யாத நில உரிமையாளர்கள் குறித்து உயர்நீதிமன்றம் தனியாக வழக்குகளை நடத்தி, தகுந்த உத்தரவுகளைப் பிறப்பித்தது, இவை, உத்தரவின் நிபந்தனைகள் எண் 4{அ} மற்றும் {ஆ} வில் குறிப்பிடப்பட்டுள்ளது. [பத்தி 40] [387–C–D]

5. நிபந்தனை எண் 4(a) மற்றும் (b) முலமாக, உயர்நீதிமன்றம், ஆணையத்திற்க்கு, நிபந்தனை எண் 3(a) மற்றும் (b) இல் உள்ள உத்தரவுகளை, இரண்டாவது வகை நில உரிமையாளர்களுக்கு நீட்டிக்கத் தயாரா, என்பதில் முடிவெடுக்க உத்தரவிட்டது. [பத்தி 41] [387–D–E]

6. மேலும், உயர்நீதிமன்றம் தெளிவாகவே, நீதிப்பேராணை மனுதாரர்களாக மனுக்கள் தாக்கல் செய்யாத நில உரிமையாளர்களுக்கு எந்தவித நிவாரணத்தையும் வழங்க மறுத்தது, மேலும் இது தொடர்பாக ஆணையம் முடிவெடுக்க உத்தரவிட்டது. [பத்தி 42] [387–E–F]

7. எனவே, இரண்டாவது வகை நில உரிமையாளர்களுக்கு இவ்வசதிகளை வழங்குவதில் ஆணையம் எடுக்கும் முடிவே இறுதியானது என்று தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. [பத்தி 43] [387–F–G]

8. மூன்றாவதாக, மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஆணையம் கூடுதல் இழப்பீடு (64.70%) வழங்குவதில் தீர்மானம் செய்து, அதன்படி அது வழங்கப்பட்டது. ஆனால், மறுபுறம், அந்த நில உரிமையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனையை ஒதுக்கீடு செய்யும் பலனை நீட்டிக்க ஆணையம் மறுத்துவிட்டது. [பத்தி 44] [387–G]

9. நான்காவதாக, கஜ்ராஜ் வழக்கில் உயர்நீதிமன்றம் மற்றும் சாவித்திரி தேவி வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய உத்தரவுகளின் அடிப்படையில் கூடுதல் மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனையை வழங்குவதில் ஆணையம் தவறியதற்காக நில உரிமையாளர்கள் ஆணையத்திற்க்கு எதிராக அவமதிப்பு மனுவை தாக்கல் செய்தனர். ஆனால், உச்சநீதிமன்றம் மனுவை விசாரித்த பின்பு, ஆணையம் மீது எந்தவித தவறுகளும் இல்லை என தீர்மானித்து, அவமதிப்பு மனுவை தள்ளுபடி செய்தது,. [பத்தி 45] [387–H; 388–A–B]

10. மேல்முறையீட்டாளர்கள் கூடுதல் மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனையை ஒதுக்குமாறு கோருவதற்கு எதுவும் சட்ட பூர்வமான உரிமையோ அல்லது உண்மையான அடிப்படையோ இல்லை. மாநிலத்திற்க்கு எதிராக செயற்கட்டளை ஆணை பரிகாரம் கோருவதற்கு, வழக்கு மனுதாரர்கள் தங்களின் சட்ட உரிமையை மனுவில் உரக்க தெரிவித்து, அது மாநிலத்திற்கு எதிரான இடைமுடியாத உண்மைகளில் அடிப்படையாக இருக்க வேண்டும். அவ்வாறே இருக்கையில் மட்டுமே மாநிலத்திற்கு எதிராக மனுதாரர்களின் நலனுக்காக செயற்கட்டளை ஆணை பிறப்பிக்கப்படும். [பத்தி 46] [388–B–C]

11. உண்மையில், உயர்நீதிமன்றம் உத்தரவிட்டபடி நிலத்தை ஒதுக்கீடு பெற முடியாத நில உரிமையாளர்கள் நிலத்தை பெற முடியாமல் போயிருந்தால், இப்போது மேல்முறையீட்டாளர்கள் அந்தப் பலனை கோருவதற்கு, உண்மையான அல்லது சட்ட அடிப்படையான முகாந்திரம் இருப்பதாக இல்லை. [பத்தி 47] [388–D]

12. மேல்முறையீட்டாளர்கள் இவ்வகை வழக்குகளில் சரத்து 14 யின், அடிப்படையில் வாதிட முடியாது. முதலில், சரத்து 14 இவ்வாறான வழக்குகளில் பொருந்தாது; இரண்டாவது, நீதிப்பேராணை மனு தாக்கல் செய்த நில உரிமையாளர்களின்

வழக்குகள் மற்றும் இப்போதைய மேல்முறையீட்டாளர்களின் வழக்குகள் ஒரே மாதிரியானவை அல்ல. உயர்நீதிமன்றம் கஜ்ராஜ் வழக்கில் இரண்டு தரப்பினரின் உரிமைகளை தீர்மானித்தாலும், அவற்றின் அடிப்படைகள் வெவ்வேறாக இருந்தன. இதனால், கஜ்ராஜ் வழக்கில் நீதிப்பேராணை மனுதாரர்கள் பெற்ற நிபந்தனை எண் 3 (a) மற்றும் (b) ஐ மேல்முறையீட்டாளர்கள் பயன்படுத்த முடியாது. எனினும், மேல்முறையீட்டாளர்கள் கஜ்ராஜ் வழக்கின் நிபந்தனை எண் 4 (a) மற்றும் (b) ஐ பயன்படுத்தி, 64.70% கூடுதலான இழப்பீட்டை ஏற்று பெற்றனர். [பத்தி 50] [388–G–H; 389–A–B]

மங்கே @ மங்கே ராம் எதிர் உத்தரப் பிரதேச மாநிலம் மற்றும் பலர் நீதிப்பேராணை மனு எண் 7521/2016 அலஹாபாத் உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பாயின; கஜராஜ் மற்றும் பலர் எதிர் உத்தரப் பிரதேச மாநிலம் மற்றும் பலர் நீதிப்பேராணை மனு எண் 37443/2011 அலஹாபாத் உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பாயின; சாவித்திரி தேவி எதிர் உத்தரப் பிரதேச மாநிலம் மற்றும் பலர் [2015] 7 எஸ்.சி.ஆர் 512 : (2015) 7 எஸ்.சி.சி. 21 குறிப்பிடப்பட்டது.

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவு</u>

[2015] 7 எஸ்.சி.ஆர் 512 குறிக்கப்பட்டது பத்தி 14

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : உரிமையியல் மேல்முறையீடு எண் 2127/2018.

அலஹாபாத் உயர்நீதிமன்றத்தில் உரிமையியல் பல்வகை நீதிப்பேராணை மனு எண் 7553/2016 இல் 01.08.2016 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவுகளிலிருந்து எழுகிறது.

உடன்

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 2134, 2145, 2139, 2142, 2140, 2141, 2135–36, 2137–38, 2143, 2146, 2144, 2128, 2130, 2129, 2131, 2133, 2132, 2148, 2193, 2192, 2190, 2171, 2170, 2147, 2149, 2152, 2165, 2153, 2150, 2156, 2151, 2162, 2163, 2167, 2154, 2161, 2157, 2155, 2164, 2158, 2159. 2160, 2195, 2172, 2173, 2177, 2182, 2168, 2175, 2166, 2174, 2176, 2181, 2187, 2183, 2179, 2180, 2178, 2186, 2185, 2191, 2184, 2189, 2188 மற்றும் 2194/2018.

மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்கறிஞர்கள்:

எஸ்.ஆர். சிங், மூத்த வழக்கறிஞர்; டாக்டர் ராஜீவ் ஷர்மா, பங்கஜ் துபே, தர்மேந்திர ஷர்மா, விபின் குமார் ஷர்மா, ரகுவீர் ஷர்மா, ஹாஜி சலீமுத்தீன், ராம் அனுக்ரா சிங், பன்வார் லால் சிங் ஜாடோன், பிரசாந்த் ஷர்மா, ஹரா பிரசாத் சாஹு, சிவ் காந்த் மிஸ்ரா, கம்லேஷ் குமார் மிஸ்ரா, கவுதம் குமார் உபாத்யாயா, சுனில் குமார் பாண்டே, பிரணய குமார் மொஹாபத்ரா, எஃப். ஐ. சவுத்ரி, துருவ் பாலிவால், மங்கல் பிரசாத், ஷ்வேதா யாதவ், அனிதா த்ரிபாதி, யாஷ் பால்திங்க்ரா, ஷஷி கிரண், மனோஜ் ஜெயின், சதீஷ் சந்திரா, சுஜித் குமார் ஜா.

எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கான வழக்கறிஞர்கள்:

ஆஷ்வர்யா பதி, AAG; ரவீந்திர குமார், சஞ்சய் குமார் பாதக், அரவிந்த் குமார் திரிபாதி, அகிலேந்திர சிங், அங்குர் யாதவ், அனுவ்ரத் ஷர்மா, அல்கா சின்ஹா, ராமன் யாதவ், சையத் மெஹ்தி இமாம், அக்ஷய் ராணா, வர்ணிதா ரஸ்டோகி, பவன்ஷ்ரீ அகர்வால், ரச்சித் மிட்டல், தான்வி அகர்வால், டாக்டர் கைலாஷ் சந்த், அபிஷேக் பேட், அனுப் ஜெயின், பிரணீத் தாஸ், தான்மய அகர்வால்.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு. அபய் மனோகர் சப்ரே, அவர்களால் பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்படுகிறது.

2. இந்த மேல்முறையீடுகள் 01.08.2016 அன்று அலஹாபாத் உயர்நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட இறுதி தீர்ப்புரை மற்றும் உத்தரவுகளை எதிர்த்து தொடரப்பட்டுள்ளன. இவை உரிமையியல் பல்வகை நீதிப்பேராணை மனு எண் 7553/2016 மற்றும் இதே போன்ற பிற மனுக்களை சமர்ப்பித்த நாள்களில் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. உயர்நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, முன் வழக்கான (நீ.மனு எண் 7521/2016, மங்கே @ மங்கே ராம் எதிர் உத்தரப் பிரதேச மாநில அரசு மற்றும் பலர்) வழக்கில் தீர்ப்பளித்தது.

3. இந்த மேல்முறையீடு விவகாரத்தை தெளிவாகக் கருத்தில் கொள்ள, இம்மேல்முறையீடுகள் தாக்கல் செய்ய நேர்ந்த காரணங்களை விளக்குவது அவசியமாகிறது.

4. நிலம் கையகப்படுத்தும் சட்டம், 1894 (இதை இங்கு "சட்டம்" என குறிப்பிடலாம்) அதன் பிரிவு 4 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, உத்தரப் பிரதேசம் (UP) அரசு பல்வேறு அறிவிப்புகளை 1976 முதல் 2010 வரை காலகட்டத்தில்

வெளியிட்டது. இவை நூற்றுக்கணக்கான ஹெக்டேர் நிலங்களை நொய்டா மற்றும் கிரேட்டர் நொய்டா கிராமங்களில் கையகப்படுத்துவதற்கானது. இந்த நிலங்கள் "திட்டமிட்ட தொழிற் வளர்ச்சி" எனப்படும் பொதுப் பயன்பாட்டுக்காகப் பெறப்பட்டன. இந்த நிலங்களைப் பயன்படுத்துவதற்கான நிர்வாகம் கிரேட்டர் நொய்டா தொழிற் ஆணையம் (இது இங்கு "ஆணையம்" என குறிப்பிடப்படும்) ஆகும், இது மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுக்கவேண்டும்.

5. சட்டத்தின் பிரிவு 4 இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், பிரிவு 6 இன் கீழ் வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகளால் தொடர்ந்து ஒழுங்கமைக்கப்பட்டன. அரசும்/ஆணையமும் அவசர நிலைச் சட்டம், பிரிவு 17 இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளை பயன்படுத்தி, கையகப்படுத்தப்பட்ட நிலங்களைப் பெற்றுக் கொண்டன. பிறகு மாநிலம்/ஆணையம் அந்த நிலங்களை சில கிராமங்களில் மேம்படுத்தியது.

6. ஏனெனில், பல நிலங்களை கையகப்படுத்தப்பட்டன, இதன்வழி சுமார் நூற்றுக்கணக்கான நில உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டனர். சில நில உரிமையாளர்கள் இதனை எதிர்த்து அலஹாபாத் உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுக்கள் தாக்கல் செய்தனர். இதில், பிரிவு 4 மற்றும் 6 இன் கீழ் வெளியிடப்பட்ட

அறிவிப்புகளின் சட்டபூர்வம் மற்றும் செல்லுபடியாகத் தன்மையை அவர்கள் எதிர்தனர். இந்த மனுக்கள் தனிப்பட்ட முறையிலும், குழுவாகவும் 1976 முதல் 2010 வரை தாக்கல் செய்யப்பட்டன.

7. எதிர்கப்பட்ட அறிவிப்புகளுக்கு எதிராக முக்கியமாக சில காரணங்கள் முன்வைக்கப்பட்டன: முதலாவது, பிரிவு 17 இன் கீழ் எந்தவொரு அவசர நிலை இல்லை. இரண்டாவது, பிரிவு 5-A இல் கூறிய விசாரணையை தவிர்ப்பது சட்டவிரோதமானது, ஏனெனில் இது நில உரிமையாளர்களை நிலம் கையகப்படுத்தும் அதிகாரியை எதிர்த்து எதிர்ப்புகளை முன்வைக்க முடியாத வகையில் இது அமைகிறது. மூன்றாவது, மாநிலம் அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்தி நிலம் கையகப்படுத்தியுள்ளது. நான்காவது, முழு நிலக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளும் தீயஎண்ணத்துடனும் மற்றும் நியாயமற்ற முறையிலும் செயல்பட்டன என்பதால் ரத்து செய்யத் தகுந்தவை.

8. நீதிப்பேராணை மனுதாரர்களின் வழக்கை அரசு மறுத்தது. நிலக் கையகப்படுத்தல் சட்டத்தின் விதிமுறைகளின் அடிப்படையில் சரியாக நடந்து உள்ளதாக அரசு தெரிவித்தது, எனவே அது அங்கீகரிக்கப்பட வேண்டியது எனக் கூறியது.

9. நீதிப்பேராணை மனுக்களில் உள்ள முரண்பாடுகளை கருத்தில் கொண்டு, மேலும், நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை எதிர்த்து பெரும் அளவிலான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் (மொத்தம் 471 மனுக்கள்), அனைத்து மனுக்களும் உயர்நீதிமன்றத்தின் முழு அமர்வுக்கு ஒரே நேரத்தில் விசாரணைக்காக இணைக்கப்பட்டன. அனைத்து மனுக்களையும் முழு அமர்வுக்கு அனுப்பியதற்கான காரணங்களில் ஒன்று, சில மனுக்கள் இரண்டு தனி அமர்வு நீதிபதிகளுக்கு வந்தபோது, மனுக்களில் உள்ள விவகாரங்களின் மீது அவர்களுடைய கருத்துகள் மாறுபட்டன. எனவே, அனைத்து மனுக்களில் எழுந்துள்ள விவகாரங்களை தீர்க்க முழு அமர்வை அமைப்பது சரியானது எனக் கருதப்பட்டது. இதன் அடிப்படையில் அனைத்து நிலுவையில் உள்ள மனுக்கள் ஒரே நேரத்தில் முழு அமர்வின் முன்னிலையில் விசாரணைக்காக ஒதுக்கப்பட்டன.

10. பின்னர், முழு அமர்வு அனைத்து மனுக்களையும் "கிராம வாரியாக" குழுக்களாகப் பிரித்து, 21.10.2011 அன்று ஒரே பொதுத் தீர்ப்பை வழங்கியது. முழு அமர்வின் முதன்மை தீர்ப்பு, கஜராஜ் மற்றும் பலர் எதிர் உத்தரப் பிரதேச மாநிலம் மற்றும் பலர் (நீ.மனு எண் 37443/2011) என்ற வழக்கில் வழங்கப்பட்டது.

11. நீதிப்பேராணை மனுக்களில் உள்ள ஒரு குழு, தாமதம் மற்றும் அலட்சியம் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டது. மற்ற முக்கியமான மனுக்களின் குழு, நிலம் கையகப்படுத்துதல் சரியானது என நீதிமன்றம் ஒப்புக்கொண்டாலும், மனுதாரர்களின் நிலங்களை அவர்களிடம் இருந்து எடுத்தமையின்படி, அவர்கள் பெறுவதற்கான இடைக்காலத்தில் கூடுதலான இழப்பீட்டை 64.70% அளவில் வழங்கவும், மேலும், ஒவ்வொரு மனுதாரருக்கும் (நில உரிமையாளருக்கும்) அவர்களின் கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் 10% அளவுக்கு மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனையை ஒதுக்கவும் அரசை உத்தரவிட்டது. நிலம் ஒதுக்குவதற்கனா உச்ச அளவு 2500 சதுர மீட்டர் ஆகும்.

12. இந்த இரண்டு உத்தரவுகள், அரசால் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் சில மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என்பதே உண்மை என கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளில் மட்டுமே பொருந்தியது. மாறாக, இந்த இரண்டு உத்தரவுகளின் நன்மைகள், மேம்பாடு மேற்கொள்ளப்பட்ட நிலங்களில் உள்ள நில உரிமையாளர்கள் (மனுதாரர்கள்) இவர்கள் மட்டுமே பெறத் தகுதியானவர்கள்.

13. ஆனால், மூன்று கிராமங்களில் உள்ள நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட போது மேம்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என கண்டுபிடிக்கப்பட்ட நிலங்களைப் பொறுத்தவரை, அந்த

நிலங்களுக்கு தொடர்புடைய அறிவிப்புகளை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது. மேலும், அந்த நிலங்களை உரிய நில உரிமையாளர்களுக்கு மீண்டும் ஒப்படைக்க அரசுக்கு உத்தரவிட்டது. இந்த தீர்ப்பின் செயல்பாட்டு பகுதி இந்த நீதிப்பேராணை மனுக்களைத் தீர்க்க முக்கியமான பகுதியாகும், இவ்வாறு குறிப்பிடப்படுகிறது:

> 3. மேலே குறிப்பிடப்பட்ட (1) மற்றும் (2) க்கான நீதிப்பேராணை மனுக்களைத் தவிர மற்ற அனைத்து நீதிப்பேராணை மனுக்களும் கீழே உள்ள உத்தரவுகளின் அடிப்படையில் முடிக்கப்படுகின்றன: (a) நீதிப்பேராணை மனுதாரர்கள், 1997 விதிமுறைகள்/தீர்ப்பின் படி பெற்ற இழப்பீட்டிற்கு கூடுதலாக, கிராம பட்வாரிக்குச் செலுத்தப்பட்ட அதே விகிதத்தில் (அதாவது 64.70%) கூடுதல் இழப்பீட்டை பெற உரிமை பெற்றவர்கள். இந்தக் கட்டணம் அவர்களுக்கு மிக விரைவில் ஆணையத்தால் வழங்கப்படும். கூடுதல் இழப்பீட்டை வாங்கிக் கொள்வதில் எவ்வளவு விகிதம் பெறப்படவேண்டும் என்பதை ஆணையம் முடிவெடுக்க முடியும். இவ்நீதிப்பேராணை மனுதாரர்களுக்கு பெறப்படாத மனுதாரர்களுக்கு கூடுதல் இழப்பீட்டையும் வழங்குவது உறுதி செய்யப்பட வேண்டும். இந்த கூடுதல் இழப்பீடு,

நில உரிமையாளர்களின் பிரிவு 18 இன் கீழ் உரிமைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

(b) அனைத்து நீதிப்பேராணை மனுதாரர்களும், கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் 10% அளவுக்கு மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனையை ஒதுக்கீடு பெற உரிமை பெற்றவர்கள், இதன் அதிகபட்சம் வராம்பு 2500 சதுர மீட்டர் வரை. ஆனால், சில வழக்குகளில் 6% அல்லது 8% அளவுக்கு நிலங்கள் ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்தால், மீதமுள்ள பகுதிக்கான நிலங்கள் ஒதுக்கப்படும் அல்லது அந்த இடத்திற்கு சமமான தொகையை ஆணையம் நில உரிமையாளர்களுக்கு வழங்க முடியும்.

4.கூடுதல் இழப்பீடும், 10% அளவுக்கு மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனை ஒதுக்கீடும் கீழே உள்ள நில உரிமையாளர்களுக்கும் வழங்கப்படுமா என்பதை ஆணையம் முடிவு செய்யலாம்.

(a) அறிவிப்புகளுக்கு எதிராக நில உரிமையாளர்கள் மனுக்கள் தாக்கல் செய்தனர், அவை தள்ளுபடி செய்யப்பட்டு அறிவிப்புகள் நிலைநிறுத்தப்பட்டன மற்றும்

(b) நீதிமன்றத்தில் வழக்கு தொடராத நில உரிமையாளர்கள், அதாவது 3 ஆம் உத்தரவின் கீழ் எதிர்கப்பட்ட அறிவிப்புகளின் பொருளாகக் கொண்ட மனுக்களுக்கு உட்பட்ட நில உரிமையாளர்கள்.

14. சில நில உரிமையாளர்கள், மேலே குறிப்பிட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்பினால் பாதிக்கப்பட்டனர் மற்றும் சிறப்பு மேல்முறையீட்டு அனுமதி பெற்று, இந்த விவகாரத்தை மேல்முறையீட்டில் கொண்டுவந்தனர். மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, 14.05.2015 அன்று நில உரிமையாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து மேல்முறையீடுகளையும் தள்ளுபடி செய்து, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஒப்புக்கொண்டது. இந்த நீதிமன்றத்தின் முதன்மைத் தீர்ப்பு சாவித்திரி தேவி எதிராக உத்தரப் பிரதேச மாநிலம் மற்றும் பலர் வழக்கில் (2015) 7 எஸ்.சி.சி. 21 வழங்கப்பட்டது. தீர்ப்பின் இயக்கப் பகுதி பின்வருமாறு:

48. நில உரிமையாளர்களுக்கு கீழ்கண்ட நன்மைகள் வழங்கப்படும்:

48.1. இழப்பீட்டை 64.7% அதிகரித்தல்;

48.2. ஒவ்வொரு நில உரிமையாளரின் கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் 10% அளவுக்கு மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனையை ஒதுக்குதல்;

48.3. 64.7% அதிகரிக்கப்பட்ட இழப்பீடு உடனடியாக வழங்கப்பட வேண்டும், மேலும் நில உரிமையாளர்கள் உயர்ந்த இழப்பீட்டை கோருவதற்கான உரிமையை பெறுவார்கள். இதற்காக நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தப்படும், மேலும் முறையான சந்தை மதிப்பு பெறுவதற்கான ஆதாரங்கள் அளிக்கப்பட்டு விசாரிக்கப்படும்.

49. இவ்வாறு செய்யப்பட்டது, நீதிப்பேராணை மனுதாரர்களுக்கு போதுமான நீதி வழங்குகிறது என்று நாங்கள் கருதுகிறோம்.

முடிவு

50. இந்த விசேஷ சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, இந்திய அரசியலமைப்பு 136 வது பிரிவின் கீழ் இங்கு நீதிமன்றம் தலையீடு செய்ய வேண்டிய நேரம் அல்ல என நாங்கள் கருதுகிறோம். ஆயினும், உயர்நீதிமன்ற உத்தரவுகள் குறிப்பிடப்பட்ட தனித்துவமான சூழ்நிலைகளில் வழங்கப்பட்டவை என்பதால், இதனை எதிர்கால வழக்குகளில் முன்னுதாரணமாகக்

கொள்ளக்கூடாது என்பதை நாங்கள் தெளிவுபடுத்துகிறோம்.

51. .....

52. உயர்நீதிமன்றத்தின் முழு அமர்வு தீர்ப்பு உறுதி செய்யப்படுகிறது, மேலும் அனைத்து மேல்முறையீடுகளும் அந்த முழு அமர்வு தீர்ப்பின் அடிப்படையில் முடிக்கப்படுகின்றன.

15. இவ்வழக்கின் மேல்முறையீட்டாளர்கள் (மேலும் அவற்றின் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டவர்கள்), முதல் முறையாக 15.02.2016 அன்று அலஹாபாத் உயர் நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்தனர். இந்த மனுக்களிலிருந்தே இந்த மேல்முறையீடுகள் எழுகின்றன.

16. நீதிப்பேராணை மனுக்களில், மனுதாரர்கள், கையகப்படுத்தும் நடவடிக்கைகளை எதிர்த்து நீதிப்பேராணை மனுக்களைத் தாக்கல் செய்த நில உரிமையாளர்களுடன் ஒரே மாதிரியான சூழ்நிலையில் இருப்பதால், கஜ்ராஜ் வழக்கில் (மேற்படி) முழு அமர்வு மனுதாரர்களுக்கு வழங்கிய மற்றும் சாவித்திரி தேவி (மேற்படி) வழக்கில் உறுதி செய்யப்பட்ட அதே நிவாரணங்களைப் பெறத் தங்களுக்கு உரிமை உண்டு என்று கோரினர்.

17. எளிமையாகச் சொல்ல வேண்டும் என்றால், உயர் நீதிமன்றத்தில் மனுதாரர்களின் (நீதிப்பேராணை மனுதாரர்கள்) நிலைப்பாடு என்னவெனில், கஜ்ராஜ் வழக்கில் (மேற்படி) முழு அமர்வால் நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டு, சாவித்திரி தேவி வழக்கில் (மேற்படி) உச்ச நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்ட நிவாரணங்கள், தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதே ஆகும். ஏனெனில், தங்கள் நிலங்களும், கஜ்ராஜ் வழக்கின் நீதிப்பேராணை மனுதாரர்களின் நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட அதே கையகப்படுத்தும் நடவடிக்கைகளில்தான் கையகப்படுத்தப்பட்டன. சுருக்கமாகச் சொன்னால், இந்த நிவாரணம், மாநிலத்தைப் பொறுத்தமட்டில், இரண்டு நில உரிமையாளர்களுக்கும் இடையே உள்ள சமத்துவக் கொள்கைகளின் அடிப்படையில் கோரப்பட்டது.

18. இருந்தாலும், 64.70% விகிதத்தில் கூடுதல் இழப்பீடு வழங்க வேண்டும் என்று பிறப்பித்த உத்தரவு, எந்தவித எதிர்ப்புமின்றி, மேல்முறையீட்டாளர்கள் உட்பட அனைத்து நில உரிமையாளர்களுக்கும் மாநில அரசால் ஏற்கனவே செலுத்தப்பட்டுவிட்டது என்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

19. கஜ்ராஜ் (மேற்படி) மற்றும் சாவித்திரி தேவி (மேற்படி) வழக்குகளின் தீர்ப்புகளின்படி, கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் 10% அளவிற்கு, அதிகபட்சம் 2500 சதுர மீட்டர் பரப்பளவுள்ள மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனையை ஒதுக்கீடு செய்யக் கோரும் நிவாரணத்தை மேல்முறையீட்டாளர்கள் பெற உரிமை உள்ளதா என்பதுதான், உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளர்களின் நீதிப்போணை மனுக்களில் முடிவெடுக்கப்பட வேண்டிய ஒரே கேள்வி.

20. எதிர்ப்பிற்குள்ளான தீர்ப்பில் (impugned judgment) உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டாளர்களுக்கு இந்த நிவாரணத்தை (relief) மறுத்துவிட்டது. இதனால், நீதிப்பேராணை மனுக்களில் தோல்வியடைந்த நில உரிமையாளர்களான மேல்முறையீட்டாளர்கள், மேல்முறையீடு செய்ய அனுமதி பெற்ற பிறகு, இந்த நீதிமன்றத்தில் தற்போதைய மேல்முறையீடுகளைத் தாக்கல் செய்துள்ளனர்.

21. எனவே, இந்த மேல்முறையீட்டுக் கட்டுகளில் பரிசீலனைக்கு எழும் குறுகிய கேள்வி என்னவென்றால், கஜ்ராஜ் வழக்கில் (மேற்படி) உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வால் 21.10.2011 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் பலனை, சாவித்திரி தேவி வழக்கில் (மேற்படி) உச்ச நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்டபடி, அதிகபட்சம் 2500 சதுர மீட்டர் வரையிலான கூடுதல் குடியிருப்பு

மனை ஒதுக்கீடு தொடர்பான விவகாரத்தில் மேல்முறையீட்டாளர்கள் (நில உரிமையாளர்கள்) கோர உரிமை உள்ளதா என்பதே ஆகும்.

22. வேறுவிதமாகக் கூறினால், இந்த வழக்கில் உள்ள கேள்வி என்னவென்றால், கஜ்ராஜ் (மேற்படி) மற்றும் சாவித்திரி தேவி (மேற்படி) வழக்குகளில் 21.10.2011 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், கையகப்படுத்தப்பட்ட தங்கள் நிலத்திற்குப் பதிலாக கூடுதல் குடியிருப்பு மனையை பெற மேல்முறையீட்டாளர்கள் உரிமை உள்ளதா என்பதே ஆகும்.

23. மனுதாரர்களின் வழக்கறிஞர் முக்கியமாக வாதிட்டது என்னவென்றால், கஜ்ராஜ் வழக்கில் (மேற்கண்ட) சில நில உரிமையாளர்களின் நலனுக்காக, ஒரே கையகப்படுத்துதல் நடவடிக்கைகளில் மாநிலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தால் (முழு அமர்வு) உத்தரவு பிறப்பிக்கப்பட்டபோது, அத்தகைய சூழ்நிலைகளில், அந்த உத்தரவின் பலன், அதே கையகப்படுத்துதல் நடவடிக்கைகளில் நிலம் கையகப்படுத்தப்பட்ட அனைத்து நில உரிமையாளர்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டும். அந்த நில உரிமையாளர்கள் மற்றவர்களுடன் சேர்ந்து கையகப்படுத்துதல் நடவடிக்கைகளை உயர் நீதிமன்றத்தில் எதிர்த்தார்களா இல்லையா

என்பதைப் பொருட்படுத்தாமல் இது பொருந்தும் என்பதே அவர்களது வாதம்.

24. வேறுவிதமாகக் கூறினால், உயர் நீதிமன்றத்தால் கையகப்படுத்துதல் நடவடிக்கைகளில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும், அது ஒன்று அல்லது இரண்டு நில உரிமையாளர்களின் நன்மைக்காக இருந்தாலும், நிலம் கையகப்படுத்தப்பட்ட அனைத்து நில உரிமையாளர்களும், நீதிப்பேராணை மனுக்களைத் தாக்கல் செய்த நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட அதே பலன்களைப் பெற உரிமை பெறுவார்கள் என்பதே வாதமாகும்.

25. மேலும், ஆணையம் தங்கள் கூட்டத்தில், நில உரிமையாளர்கள் அனைவருக்கும் கூடுதல் நிலம்/பகுதி வழங்க *கஜ்ராஜ்* வழக்கின் உத்தரவுகளின் அடிப்படையில் முடிவு செய்தது. எனவே, உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டாளர்களுக்கு (நில உரிமையாளர்கள்) அதே நன்மைகளை வழங்காமல் தவறியுள்ளது. இந்நிலையில், உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டாளர்களுக்கு இந்த நிவாரணத்தை வழங்காதது தவறு என்று வழக்கறிஞர் வாதிட்டார். இத்தகைய தீர்மானம் இருந்தபோதிலும், மற்றவர்களைப் போலவே ஒத்த நிலையில் உள்ள மேல்முறையீட்டாளர்கள், கஜ்ராஜ் வழக்கில் உயர் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பின் பலனை ஏன் மறுக்கப்பட வேண்டும் என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை என்றும் வாதிடப்பட்டது. இத்தீர்ப்பு,

ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனையை (developed abadi plot) ஒதுக்கீடு செய்ய மாநில அரசுக்கு உத்தரவிட்டிருந்தது.

26. மேல்முறையீட்டாளர்களின் (நில உரிமையாளர்கள்) வழக்கறிஞர்கள் அனைவரும், தங்கள் மேல்முறையீடுகளுக்கு ஆதரவாகச் சமர்ப்பித்த வாதங்களில், இந்தக் கருத்துக்களைத்தான் முதன்மையாக ஏற்றுக்கொண்டு விரிவாக எடுத்துரைத்தனர்.

27. பதிலாக, எதிர்மேல்முறையீட்டாளர்கள் (மாநிலம் மற்றும் ஆணையம்) தரப்பின் ஆஜரான வழக்கறிஞர் உயர்நீதிமன்ற தீர்ப்பின் நியாயங்களை நியாயப்படுத்தி, இந்த மேல்முறையீடுகளில் தலையீடு செய்ய தேவையில்லை என்று கூறினர்.

28. வழக்கறிஞர் தனது வாதங்களை விரிவாக எடுத்துரைக்கும்போது, முதலாவதாக, கஜ்ராஜ் வழக்கில் (மேற்படி) உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளும், சாவித்திரி தேவி வழக்கில் (மேற்படி) உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளும், உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனுக்களையும், இந்த நீதிமன்றத்தில் உரிமையியல் மேல்முறையீடுகளையும் தாக்கல் செய்த நில உரிமையாளர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதைச் சுட்டிக்காட்டினார். இது தீர்ப்புகளிலிருந்தே தெளிவாகிறது.

29. இரண்டாவதாக, வழக்கறிஞர் சுட்டிக்காட்டியது என்னவென்றால், கையகப்படுத்துதல் நடவடிக்கைகளை எதிர்க்காத நில உரிமையாளர்களுக்கு 64.70% கூடுதல் இழப்பீடு (additional compensation) வழங்கவும், மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு நிலத்தில் (developed abadi land) இருந்து மனை ஒதுக்கீடு செய்யவும் மாநில அரசும், ஆணையமும் தயாராக இருக்கிறதா என்பதைத் தீர்மானிக்க உயர் நீதிமன்றம் அவர்களுக்கு உத்தரவிட்டிருந்தது.

30. கஜ்ராஜ் வழக்கில் (மேற்படி) உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களைத் தொடர்ந்து, எதிர்மனுதாரர்கள் (மாநிலம் மற்றும் ஆணையம்) 64.70% விகிதத்தில் கூடுதல் இழப்பீடு அனைத்து நில உரிமையாளர்களுக்கும் செலுத்தத் தீர்மானித்தனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால், ஆணையத்திடம் கூடுதல் நிலம் இல்லாததால், ஒதுக்கீடு உத்தரவு பிறப்பிக்கப்பட்டவர்களுக்கு உட்பட, ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் மனை ஒதுக்கீடு செய்யத் தங்களால் இயலாது என்று அவர்கள் தெரிவித்தனர்.

31. மூன்றாவதாக, பிரதிவாதிகள் (மாநிலம் மற்றும் ஆணையம்) அதன்படி, மேல்முறையீட்டாளர்கள் (நில உரிமையாளர்கள்) உட்பட ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் 64.70% விகிதத்தில் கூடுதல் இழப்பீடு செலுத்தினர் என்று வழக்கறிஞர் சுட்டிக்காட்டினார்.

32. நான்காவதாக, கூடுதல் மனை ஒதுக்கீடு குறித்த உத்தரவுகள் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருந்த பல நில உரிமையாளர்களுக்கு மனை கிடைக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. எனவே, அவர்கள் அவமதிப்பு மனுக்களைத் (contempt petitions) தாக்கல் செய்தனர். ஆனால், உச்ச நீதிமன்றம் இந்த மனுக்களைத் தள்ளுபடி செய்து, மாநிலம்/ஆணையத்திற்கு எதிராக அவமதிப்பு வழக்கு இல்லை என்று தீர்ப்பளித்தது. வேறு வார்த்தைகளில் கூறினால், ஆணையத்திடம் கூடுதல் நிலம் இல்லை (non–availability of additional land) என்ற நிலையை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

33. கடைசியாக, மேல்முறையீட்டாளர்களுக்கு எவ்வித உண்மை அடிப்படையோ (factual foundation) அல்லது சட்டபூர்வ உரிமையோ இல்லாததால், அவர்கள் நீதிப்பேராணை மனுக்களில் கோரிய நிவாரணத்தைப் பெற உரிமை இல்லை என்றும், அதை உயர் நீதிமன்றம் சரியாகவே மறுத்துவிட்டது என்றும் வழக்கறிஞர் வாதிட்டார்.

34. இவை எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பின் வழக்கறிஞர்களின் வாதங்கள் ஆகும்.

35. இரு தரப்பின் வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டபின், வழக்கின் பதிவேடுகளைப் பரிசீலித்தும், மேல்முறையீட்டாளர்கள் (நில உரிமையாளர்கள்) தரப்பு வழக்கறிஞரால் முன்வைக்கப்பட்ட

வாதங்களில் எந்தவித நியாயமும் இல்லை என்று நாங்கள் கண்டறிகிறோம்.

36. மேலே குறிப்பிடப்பட்டவாறு, கஜ்ராஜ் (மேற்படி) வழக்கில் உயர்நீதிமன்றம் வழங்கிய இரண்டு உத்தரவுகளில், அதாவது ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் நிலமதிப்பை 64.70% விகிதத்தில் கூடுதலாக வழங்கும் உத்தரவு ஏற்கனவே மாநிலம்/அதிகாரம் செயல்படுத்தியது மற்றும் அதன்படி மேல்முறையீட்டாளர்களுக்கும் செலுத்தப்பட்டது என்பது விவாதத்திற்குரியதல்ல. அதன்படி, மனுதாரர்களின் நீதிப்பேராணை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட போதிலும், அவர்களுக்கும் பணம் செலுத்தப்பட்டது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், மனுதாரர்கள் கஜ்ராஜ் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பகுதியளவு பலனை எந்த போட்டியுமின்றிப் பெற்றனர்.

37. ஆகவே, இப்போது இம்மேல்முறையீடுகளில் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரே கேள்வி என்னவென்றால், மேல்முறையீட்டாளர்கள், கஜ்ராஜ் வழக்கில் (மேற்படி) உயர்நீதிமன்றம் வழங்கிய இரண்டாவது உத்தரவான மேம்பட்ட குடியிருப்பு நிலம் ஒதுக்கீட்டைப் பெறுவதற்கு தகுதி பெறுகிறார்களா என்பதாகும்.

38. எங்கள் கருத்துரைத்தபடி, மேல்முறையீட்டாளர்கள் மேற்படி இரண்டாவது உத்தரவின் பயனைப் பெறத் தகுதி பெறுவதில்லை, இதற்கான காரணங்களை நாம் கீழே விளக்குகின்றோம்.

39. முதலில், கஜ்ராஜ் (மேற்படி) வழக்கில் உயர்நீதிமன்றம், மேம்பட்ட குடியிருப்பு நிலம் ஒதுக்கீட்டின் நிவாரணத்தைத் தெளிவாகவே நீதிப்பேராணை மனுத்தாரர்களுக்கு மட்டும் வழங்கியது. வேறு வார்த்தைகளில், மேலேயுள்ள உத்தரவை வழங்கியபோது, இந்த நிவாரணம் நீதிப்பேராணை மனுத்தாரர்களுக்கு மட்டும் வழங்கப்படும் என உயர்நீதிமன்றம் தெளிவுபடுத்தியது (நிபந்தனை எண். 3(a) மற்றும் (b) ஐப் பார்க்கவும்).

40. இரண்டாவது, நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையை எதிர்த்து சவால் விடுக்காத (இங்கு மேல்முறையீட்டாளர்கள் போல) நிலதாரர்கள் சம்பந்தமான வழக்குகளை உயர்நீதிமன்றம் தனித்தனியாகப் பார்த்து, அதற்கான உத்தரவுகளை நிபந்தனை எண். 4(a) மற்றும் (b) இல் வெளியிட்டது.

41. நிபந்தனை எண். 4(a) மற்றும் (b) இல், உயர் நீதிமன்றம் வெளிப்படையாகவே (in express terms) ஆணையத்திற்கு ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. அதன்படி, நிபந்தனை எண். 3(a) மற்றும் (b) இல் உள்ள வழிகாட்டுதல்களின் பலன்களை இரண்டாவது வகையைச் சேர்ந்த நில உரிமையாளர்களுக்கும் (second category of landowners) நீட்டிக்க ஆணையம் தயாராக இருக்கிறதா இல்லையா என்பது குறித்து முடிவெடுக்க (to take a decision) ஆணையத்திற்கு உத்தரவிட்டது.

42. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நீதிப்பேராணை மனுத்தாரர்கள் அல்லாத நில உரிமையாளர்களுக்கு எவ்வித நிவாரணத்தையும் வழங்க உயர் நீதிமன்றம் வெளிப்படையாகவே மறுத்துவிட்டது. மாறாக, அதே பலனை மற்ற ஒத்த நிலையில் உள்ள நில உரிமையாளர்களுக்கு நீட்டிக்கத் தயாராக இருக்கிறதா என்பதைத் தங்கள் முடிவில் தீர்மானிக்குமாறு ஆணயத்திற்கு (Authority) உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

43. ஆகவே, இரண்டாவது வகை நிலதாரர்களுக்கு மேற்சொல்லப்பட்ட நிவாரணத்தை வழங்கத் தயாரா என்ற கேள்வியைத் தீர்மானிக்க அணையம் விருப்பத்திற்கு விடப்பட்டிருக்கிறது என்பது தெளிவாக இருக்கிறது.

44. மூன்றாவது, மேலே குறிப்பிடப்பட்டபடி, அதிகாரம், உத்தரவுகளைப் பின்பற்றி 64.70% கூடுதல் இழப்பீட்டை வழங்கும் பலனை நீட்டிக்க முடிவு செய்து, அதன்படி பணமும் செலுத்தப்பட்டது. ஆனால், மறுபுறம், அந்த நில உரிமையாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனை (developed abadi plot) ஒதுக்கீடு செய்யும் பலனை நீட்டிக்க ஆணையம் மறுத்துவிட்டது.

45. நான்காவதாக, இது ஒரு பதிவு செய்யப்பட்ட விடயம் என்பதால், இதில் எந்தச் சர்ச்சையும் இல்லை. கஜ்ராஜ் (மேற்படி) வழக்கில் உயர் நீதிமன்றத்தாலும், சாவித்திரி தேவி (மேற்படி) வழக்கில் உச்ச நீதிமன்றத்தாலும் கூடுதல் குடியிருப்பு மனை ஒதுக்கீடு குறித்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்த நில உரிமையாளர்களுக்குக்கூட, அந்தப் பலனை ஆணையம் நீட்டிக்கத் தவறியபோது, நில உரிமையாளர்கள் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளைப் பின்பற்றாதது குறித்து ஆணையத்திற்கு எதிராக அவமதிப்பு மனுக்களைத் (contempt petition) தாக்கல் செய்தனர். ஆனால், உச்ச நீதிமன்றம் இந்த அவமதிப்பு மனுக்களைத் தள்ளுபடி செய்து, உத்தரவுகளைப் பின்பற்றாதது குறித்த எந்த வழக்கும் இல்லை என்று தீர்ப்பளித்தது.

46. எங்கள் பார்வையில், மேல்முறையீட்டாளர்கள் கூடுதல் மேம்பட்ட குடியிருப்பு நிலம் ஒதுக்கீட்டைத் தருவதற்கான எந்த சட்ட உரிமையும் அல்லது உண்மையான அடிப்படையையும் கொண்டிருக்கவில்லை. மாநிலத்திற்கு எதிராக இத்தகைய நிவாரணத்தை கோருவதற்கான ஒரு ஆணையை பிறப்பிக்க கோர, நீதிப்பேராணை மனுத்தாரர்கள் தங்களின் சட்ட உரிமையை மாநில அரசுக்கு எதிரான சர்ச்சைக்கு இடமில்லாத உண்மைகளின் அடிப்படையில் முன்வைத்து நிரூபிக்க வேண்டியது அவசியம். அதுவும் மாநிலத்திற்கெதிராக நீதிப்பேராணை மனுதாரர்களின் நலனுக்காக ஒரு ஆணை பிறப்பிக்க முடியும். இந்த வழக்கில் அப்படி ஒன்றும் இல்லை.

47. உயர் நீதிமன்றத்தால் நிலம் ஒதுக்கீடு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நில உரிமையாளர்களுக்கே மனை கிடைக்காத நிலையில், இந்த மேல்முறையீட்டாளர்கள் தங்களுக்குச் சாதகமான உண்மை மற்றும் சட்டபூர்வமான அடிப்படை இல்லாததால், அத்தகைய நிவாரணத்தைக் கோர எந்தக் காரணமும் இல்லை.

48. நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் (Land Acquisition Act) கீழ் நில உரிமையாளர்களுக்கு இத்தகைய நிவாரணங்களை வழங்குவதற்குச் சட்டத்தில் எந்தவித விதியும் இல்லை என்பதை மறுக்க முடியாது. இதேபோல், மாநில அரசு அனைத்துச்

சட்டரீதியான இழப்பீடுகளையும், அதாவது சட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய அனைத்து இழப்பீடுகளையும் ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் செலுத்தியது என்பதில் எந்தச் சர்ச்சையும் இல்லை. அதுமட்டுமின்றி, ஒவ்வொரு நில உரிமையாளரும் சட்டத்தின் கீழ் அவர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டிற்கு மேல், 64.70% விகிதத்தில் கூடுதல் இழப்பீட்டையும் பெற்றனர்.

49. கஜ்ராஜ் வழக்கில் (மேற்படி) நிவாரணங்களை உயர்நீதிமன்றம் அரசியலமைப்பு சட்டத்தின் 226 ஆம் பிரிவின் கீழ் விசேஷ அதிகாரம் பயன்படுத்தி அந்த வழக்கின் தனித்துவமான உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு வழங்கியது. இவை நீதிப்பேராணை மனுக்களைத் தாக்கல் செய்த நில உரிமையாளர்களுக்கு மட்டுமே வரம்பிடப்பட்டன. சாவித்திரி தேவி (மேற்படி) வழக்கில் உச்ச நீதிமன்றம்கூட, வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள் எதிர்காலத்தில் மற்ற வழக்குகளுக்கு ஒரு முன்னுதாரணமாக (precedent) கருதப்படக்கூடாது என்றும், அவை அந்த வழக்கிற்கு மட்டுமே வரம்பிடப்பட வேண்டும் என்றும் தீர்ப்பளித்தது.

50. இவை தவிர, இம்மேல்முறையீட்டாளர்கள் அரசியலமைப்பு சட்டம் 14–ஆம் பிரிவின் அடிப்படையில் எந்தவித நிவாரணத்தையும் கோருவதற்கான அடிப்படை இல்லை. முதல் காரணமாக, 14–ஆம் பிரிவு இத்தகைய வழக்குகளில் பொருந்தாது;

இரண்டாவது, நீதிப்பேராணை மனுத்தாரர்கள் மற்றும் இம்மேல்முறையீட்டாளர்களின் வழக்குகள் ஒன்றுக்கொன்று ஒத்துமையற்றவை. கஜ்ராஜ் (மேற்படி) வழக்கில் உயர்நீதிமன்றம் இரு வகை நிலதாரர்களின் உரிமைகளைத் தீர்மானித்தாலும், இருவரின் வழக்குகளும் வெவ்வேறான அடிப்படையில் இருந்தது. இந்த காரணங்களுக்காகவே, இம்மேல்முறையீட்டாளர்கள் கஜ்ராஜ் வழக்கின் (மேற்படி) நிபந்தனை எண். 3 (a) மற்றும் (b) இன் பயனைப் பெற தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டனர், அது நீதிப்பேராணை மனுத்தாரர்களுக்காகவே அன்றி, மேல்முறையீட்டாளர்களுக்காக இல்லை. எனினும், மேல்முறையீட்டாளர்கள், மேற்படி தீர்ப்பின் நிபந்தனை எண். 4 (a) மற்றும் (b) இன் பயனைப் பெற தகுதியுடையவர்கள் என கருதப்பட்டு, அவர்கள் 64.70% கூடுதல் இழப்பீட்டை ஏற்றுக் கொண்டு பயனைப் பெற்றனர்.

51. எனவே, எங்கள் கருத்தில், அனைத்து நிலதாரர்களுக்கும், அதில் மேல்முறையீட்டாளர்களும் சேர்ந்து, நீதிக்குரிய நிவாரணம் அளிக்கப்பட்டது என்று சாவித்திரி தேவி வழக்கின் (மேற்படி) பத்தி 49 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி.

52. எனவே, மேல்முறையீட்டாளர்கள் கூடுதல் மேம்பட்ட குடியிருப்பு நிலம் ஒதுக்கீடு எனும் நிவாரணத்திற்கான எந்தவித நியாயமான காரணமும் இல்லை. மேல்முறையீட்டாளர்களின்

கோரிக்கையை ஏற்றுக்கொண்டால், அது சாவித்திரி தேவி வழக்கின் (மேற்படி) தீர்ப்பின் பத்தி 50 இல் உள்ள உத்தரவுகளுக்கு விரோதமாக இருக்கும்.

53. மேற்கண்ட விவாதத்தின் அடிப்படையில், மேல்முறையீட்டாளர்களின் வழக்குகளை எந்த கோணத்திலிருந்து பார்த்தாலும், எங்கள் பார்வையில் அது எந்தத் தகுதியும் இல்லை என்பதை நாங்கள் காண்கிறோம். எனவே அந்த மேல்முறையீடுகள் தோல்வியுற்று நிராகரிக்கப்படுகின்றன.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."